நற்கொடை.

மனந்திரும்புதலும் அதன் தன்மையும்.

மனுஷர் யாவரும் பாவிகளாய்த் தேவனை விட்டுப் பிரிந்து பரிசுத்தத்தையும் மனப்பாக்கியத்தையும் இழந்து போனதினால் அவர்கள் இரட்சணியத்தை அடைந்து தேவன் அண்டைக்குத் திரும்புவதற்கு மனந்திரும்புதல் அவசியமென்று தேவவாக்குக் கூறுகின்றது.

கிறிஸ்துநாதருக்கு முந்தூதனாகிய யோவான்ஸ்நானன் அவருடைய வருகைக்கு எத்தனமாய்த் தன் ஊழியத்தை ஆரம்பித்தபோது, "மனந்திரும்புங்கள், பரலோக ராச்சியஞ் சமீபித்திருக்கிறது" என்று மனந்திரும்புதலைப் பிரசங்கம் பண்ணினான். (மத் 3: 2.) "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" (மத். 3: 7-8.) என்று தன்னிடம் ஞானஸ்நானம் பெற வந்தவர்களுக்கு யோவான் எச்சரித்ததனால் இந்த மனந்திரும்புதலின் தன்மை தெரியவரும். யோவான் பிரசங்கித்த மனந்திரும்புதலிற் பாவவுணர்ச்சி, பாவ அறிக்கை, பாவத்தை விட்டுத் திரும்புதல் என்னும் மூன்று காரியங்கள் சேர்ந்திருந்தன.

எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவும் யோவானைப் போலவே; நீங்கள் "மனந்திரும்பிச் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற். 1: 15.) என்று தமது பாவநிவாரண ஊழியமாகிய சுவிசேஷ விசுவாசத்தைத் தமது ஊழியத்தின் ஆரம்பகாலத்திற்றானே இணைத்துப் பேசினார். இருதயத்திலே குற்றுண்டவர்களாகிச் "சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும்" (அப். 2: 37.) என்று கேட்டவர்களுக்குப்: "பாவமன்னிப்புக்கென்று யேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம்பெற்றுக்கொள்ளுங்கள்" (அப். 2: 38.) என்று அப்போஸ்தலர் உத்தரஞ் சொன்னார்கள். கிறிஸ்துவின் மேல்வைக்கும் விசுவாசம் கரும்பிற் சாறு போல மனந்திரும்புதலோடு மருவியிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் மார்ஸ்மேடையில் நின்று அத்தேனே நகரத்தாரைக் கண்டித்துப் பேசினபோது

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" என்றான்.

மனந்திரும்புதல் என்று மொழி பெயர்க்கப்பட்ட மூலபாஷையிலுள்ள பிரதான பதத்திற்கு மனமல்லது நோக்கம்மாறுதல் என்றருத்தமாம். இம்மாறுதல் பாவத்தின் கேட்டை உணர்ந்து பயபக்தியாய்த் துக்கித்தலாம். ஆயின் இவற்றால் மனந்திருபுதலாகமாட்டாது.

1 வது. மனந்திரும்புதல் புறம்பான மாறுதலாகாது மனம் நோக்கங்களின் உள்ளான மாறுதலாம். சுருக்கமாய்ச் சொல்லுகில் சத்தியமான மறுசெனனமாம். வழக்கமாய் இச்சொல்லு ஒருவன் தான் இரிகித்த பாவத்தை உணர்ந்து அதைவிட்டுத் தேவனிடம் திரும்புதல் என்னும் பொருளைத்தரும். மனந்திரும்புதலோடு பாவ உணர்ச்சி எப்போதும் இணைந்திருக்கும்.

தங்களுக்கு இன்பமும் ஆதாயமும் என்று தோன்றுகிறதை விட்டுவிடும் குணம் சுபாபத்தே மனுஷரிடமில்லை. தான் பாவி என்றும், தேவதுரோகி என்றும், தப்ப முடியா நித்திய அழிவிற்குப் பாத்திரனென்றும் உணராது அந்த நிலைமையிற்றானே ஒருவன் நிலைத்திருப்பானாகில் மாறுதலடைய வேண்டும் என்னும் அவசியமும் அடைதற்குரிய குணமும் அவனிடம் உண்டாகவே மாட்டா. ஆகவே சென்ம சுபாபமான பாவங்களைக் குறித்து மாத்திரமல்லத் தேவனுக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும், அவருடைய தூய திருச் சித்தத்துக்கும் விரோதமான பாவங்களைக் குறித்த உணர்ச்சி எல்லாவற்றிற்கும் முதலவசியமாகும். பிதாவின் வீட்டை விட்டுப்போன கெட்டகுமாரன், புத்திதெளிந்து தன் நிர்ப்பந்தமான நிலைமையைப் பற்றிச் சிந்தித்து, இவையெல்லாம் தனது துஷ்டகையால் வந்தனவென்று உணர்ந்தபோது, இருதயம் நொருங்குண்டதனாலான அறிக்கையிடுங் குணத்தோடு தன் பிதாவிடம் வந்து, "தகப்பனே, பரத்துக்கு விரோதமாவும், உமக்கு விரோதமாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உமது குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல" (லூக். 15: 21) என்றான்.

உண்மையான மனந்திரும்புதலிற் பாவ உணர்ச்சி
யும் அறிக்கையுமே அல்லாது பாவ வெறுப்பும் அதன்
வல்லமையினின்று சுயாதீனப்படும் ஆசையும் மரு
வியிருக்கிறது. பாவத்தை அருவருக்காத ஒருவனுக்குப்
பாவத்தின் கொடுமையும் அதிலே நிலைகொண்டிருப்ப
தால் ஆகும் கேடும் சரியாய்த் தோன்றமாட்டா.

உண்மையான மனந்திருப்புதலானது முன் விட்டுவ
ந்த பாவத்திற்குத் திரும்பும் ஆசையை வரவொட்டாது.
சிற்றின்ப ஆசைகளை நிறைவேற்ற மாமிசத்திற்கு இட
ங்கொடாது. மெய்மனஸ்தாபங்கொண்ட இருதயத்தி
லே பாவப்பகை வாசஞ்செய்வதால் மறுபடி அதைச்
செய்யும் விருப்பை வரவொட்டாமல் அதை உச்சாக
மாய்க் காத்துக்கொள்ளும்.

2 வது. மெய் மனஸ்தாபத்தின் இரண்டாம் இலட்
சணம் அதன் விரைந்த வருகையாம். அது படிப்படி
யாய் மெல்ல மெல்ல வராமல் ஒரேமுறையில் வந்து
விடும். செய்பிற்குக் களிம்பு சுபாபமானதுபோல இரு
தயத்திற் பாவம் சுபாபமாய் ஆளுகைசெய்து பெலன்
கொண்டிருப்பதால் அது ஒரேமுறையில் இருதயத்தை
விட்டு அகலுகிறதில்லை.

தேவசுதனாய் எனக்குத் தோன்றிய தேவனுக்கு விரோ
தமாகவே நான் கிறிஸ்தவர்களைப் பக்திவயிராக்கிய
மாய்த் துன்புறுத்தினேன் என்ற உணர்ச்சி, பவுல் அப்
போஸ்தலனுக்கு உண்டானபோதோ, அவனிடமிருந்த
முந்தின எண்ணம் மாறிப் புதிய எண்ணம் உண்டாகிப்
புதிய உணர்ச்சி அவனுடைய இருதயத்திலே குடிகொ
ள்ளத், தான் கோபமூட்டிவந்த அவரையே நோக்கி
"ஆண்டவனே நான் என்ன செய்யச் சித்தமாய் இருக்
கிறீர்" என்றான்.

3 வது. உண்மையான மனந்திரும்புதலின் மூன்றாம்
இலட்சணம் "மனந்திருபுதலுக்கேற்ற கனிகளைக் கொ
டுங்கள்" என்றதனால் விளங்கலாகும். கிரியையற்ற
விசுவாசம் செத்ததானதுபோலக் கிரியையற்ற மனந்தி
ரும்புதலும் செத்ததாகும். இரட்சிப்புக்குரிய மனந்
திரும்புதல் மனநோக்கம் மாறியதற்குத் தக்கதான கனி
களை விளக்கும். பாவத்தைக் குறித்து வியாகுலப்படு
தலும், விசனப்படுதலும், அதை வெறுத்து அவ் வெறுப்
பிற்கு இணங்கக் கிரியை செய்தலும் எப்போதும் உண்

ணையான மனந்திரும்புதலாகாது. இதற்கு யூதாஸ்காரி யோத்தின் காரியமே தக்க திருட்டாந்தமாம். "அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் அவர் மரண ஆக்கினைக்குத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டு - - - - - - நான்றுகொண்டு செத்தான்." மத். 17:3-6. யூதா தான் செய்த துரோகம் பெரிதென்று உணர்ந்து தாராளமாய் அறிக்கையிட்டுத் தன்பாவத்தைப் பகைத்துத் தன் மனதிற் குடிகொண்டிருந்த பொருளாசையால் அநியாயமாய் அபகரித்த காசை வீசும்படியான செயல் உடனே அவன் மனதில் வந்தும், மனந்திரும்புதலுக்கேற்ற கனி காணப்படாமல் மனோவேதனையும் ஆறுக் கவலையே அவனுக்கு முடிவாயின.

பேதுரு அப்போஸ்தலன் குற்றஞ் செய்தபோது உண்டான உணர்ச்சி யூதாசிடம் உண்டான உணர்ச்சி போலிருந்தாலும் கனியோ வித்தியாசமானது. "நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று கர்த்தர் தன்னிடத்திற் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியேபோய் மனங் கசந்து அழுதான்." லூக். 22: 61, 62. பேதுரு தான் செய்த குற்றத்தைப்பற்றி ஆழமாய் உணர்ந்து, வியாகுலப்பட்டுத் தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தித் தன் ஆத்துமாவைத் தீமுன் மெழுகெனவுருகச் செய்து தான் மறுதலித்தயே ஊழியத்திற்கென்று தன்னைப் புதிதாய்ப் பிரதிட்டை செய்தான்.

"தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகின்றது." 2 கொரி. 7: 10.

சிநேகிதனே, நீ பாவி அல்லவா? பாவத்தைக் குறித்த துக்கமும் உணர்ச்சியும் உன்னிடம் உண்டா? அப்படியேல் நீ கொடுக்கும் கனிகள் யாவை? தற்சேசித்தி. இரட்சாபெருமான் அண்டைக்குத் திரும்பு.

Published by the Jaffna Religious Tract Society
Strong and Asbury Printers, Manippay, 1886.
First Edition 5,000.